# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.1/2020

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 01 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரியா | மதம் | : இந்து |
| த/பெ | : பழனி | ஜாதி | : -- |
| வயது | : 35 | கிராமம் | : மத்தூர் |
| தொழில் | : தனியார் நிறுவனம் | வட்டம் | : திருத்தணி |

**01.09.2025**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 5ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 02.12.1985ம் தேதியிட்டு உமகாந்தன் என்பவர் மணிகிளரி என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 02.05.1990ம் தேதியிட்ட பழனி என்பவர் மணிகிளரி என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.4107 எங்கள் பெயரில் உள்ள கூட்டு பட்டா தாக்கல் செய்கிறேன். **(கூட்டு பட்டா வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 03.01.2019ம் தேதியிட்டு திருவள்ளூர் நிலஅபகரிப்பு தடுப்பு பிரிவில் இருந்து 2ம் வாதிக்கு வந்த அறிவிப்பு தாக்கல் செய்கிறேன். **(அறிவிப்பு வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 01.01.2013 முதல் 20.05.2018ம் தேதி வரையிலான வில்லங்க சான்று சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 01.01.1987 முதல் 17.03.2013ம் தேதி வரையிலான

வில்லங்க சான்று சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 10.01.2020ம் தேதியிட்ட வில்லங்க சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.4107 எங்கள் பெயரில் உள்ள கூட்டு பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கூட்டு பட்டா வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். **(நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ1 ஆகவும் வரைபடம் நீ.ம.சா.ஆ 2 ஆகவும் புகைப்படங்கள் (8 எண்ணம்) மற்றும் குறுந்தகடு நீ.ம.சா.ஆ 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)